**DEPOSITION OF WITNESS**
Chapter XXIII Code of Criminal Procedure.)
- - - - -

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT MADHAVARAM.**

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | **STC.No. 576/2021** |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of witness for | : | Prosecution PW.1 |
| Name | : | Kalyanasundaram |
| Father's Name | : | Gangadhar Jawahar |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21/09/2022.

**குறுக்கு விசாரணை .**

எனக்கு பிரதிவாதியை 4 , 5 வருடங்களாக தெரியும். அவருடைய அப்பாவை 10 வருடங்களுக்கு மேலாக தெரியும். பிரதிவாதிக்கு நான் 03.06.2021 அன்று பணத்தை கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் கடன் பத்திரம் எதிரி எனக்கு எழுதி கொடுத்தது தான். அது எ.ம.ஆ. 1 ஆகும். அது இந்த கடன் பத்திரத்திற்கு Security ஆக தான் இந்த வழக்கு காசோலை அளித்தார் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் சி.எஸ்.ஆர் அறிக்கை எனக்கு எதிராக எதிரி காவல் நிலையத்தில் அளித்த புகாரின் பேரில் பதியபட்டது என்றால் சரிதான். அது. எ.ம.ஆ. 2 ஆகும்.எ.ம.ஆ 1 உடன் வாங்கிய காசோலை வைத்து தான் தற்போது எதிரி மீது வழக்கு கொடுத்தேன் என்றால் சரியல்ல. பு.ஆ. 4 ல் வெறும் அஞ்சலக Tracking Sheet என்றும் அஞ்சல ஒப்புகை அட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரியின் வங்கி கணக்கு மூடப்பட்டது என்று எனக்கு எப்போது தெரியும் என்றால் நான் செலுத்திய காசோலை திரும்பபெற்ற போது தான் தெரியும்.03.09.2021 அன்று எதிரி எனக்கு காசோலையை கொடுத்தது வழக்கிற்காக கற்பனையாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.காசோலையில் எதிரி கையெழுத்து மட்டும் தான் போட்டு உள்ளார் என்றும் காசோலையின் தொகை மற்றும் தேதி நானே தான் நிரப்பினேன் என்றால் சரிதான்.2017 வருடத்தில் எதிரிக்கு

பத்திரம் வாங்கி கடன் கொடுத்தேன் என்றால் சரிதான். இதற்குண்டான வருமான வரி செலுத்தி உள்ளேனா என்றால் செலுத்தியுள்ளேன். நான் 2ரூபாய் வட்டிற்கு கடன் கொடுத்தேன் என்றால் சரிதான் . அந்த 2 ரூபாய் வட்டி அநியாய வட்டி என்றால் சரியல்ல. 03.06.2021 அன்று நான் பணத்தை எதிரியின் அப்பாவிடம் கொடுத்தேன். ரூபாய் 20 ஆயிரத்திற்கு மேல் பண பரிவர்தனை செய்யும் போது வங்கி கணக்கு மூலம் தான் செய்ய வேண்டும் என்ற விதியை நான் மீறியுள்ளேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது**